Qb:3
M96
115360

T·D·R·C. 699

R.P. 19-4-1896.

நல்ல

# பாவசங்கீர்த்தனம்.

திருச்சிறாப்பள்ளி

அர்ச். சூசையப்பர் கல்விசாஸ்திர மடத்து
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1896

✠

A. M. D. G.

19/4-1896 (699)

# நல்ல

# பாவசங்கீர்த்தனம்

திருச்சினாப்பள்ளி

அர்ச். சூசையப்பர் கல்விசாஸ்திர மடத்து
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1896.

Cum Permissu Superiorum.

நல்ல

# பாவசங்கீர்த்தனம்.

நாம் மனமறிய ஒருபோதும் ஒரு சாவான பாவத்தையாவது பாவசங்கீர்த்தனத்தில் ஒளிக்கலாகாது.

அர்ச். தெரேசம்மாள் சேசுசபைக் குருவானவர் ஒருவருக்கு எழுதின காகிதத்தில்: சுவாமீ, தேவ துரோகமான கள்ளப் பாவசங்கீர்த்தனத்தின்மேல் பிரசங்கியுங்கள்; ஏனென்றால் பசாசானது கிறீஸ்துவர்களைக் கெடுத்து நரகத்துக்குக் கொண்டுபோகும்படி செய்கிற பல உபாயங்களுக்குள்ளே, அவர்களைக் கள்ளப் பாவசங்கீர்த்தனம் பண்ணச் செய்வது ஒரு முக்கியமான உபாயமாயிருக்கிறதென்று சொல்லியிருக்கிறாள்.

# I.

**கிறீஸ்துவர்கள் கள்ளப் பாவசங்கீர்த்தனம் செய்து தேவ துரோகம் கட்டிக்கொள்வதற்கு முகாந்தரமென்ன ?**

இதற்கு பல முகாந்தரங்கள் உண்டு. ஆயினும் அவைகளில் அதிக முக்கியமாயிருந்து ஆண்பிள்ளைகளிலும் விசேஷமாய்ப் பெண்பிள்ளைகளிலும் வெகுபேரை மோசப்படுத்துவதென்னவெனில் நியாயமில்லாத ஒருவகை வெட்கமும் கூச்சமுமாம். இதினாலே அவர்கள் தாங்கள் செய்த கனமான பாவங்களைப் பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தாமற் போகிறார்கள்.

ஆண்பிள்ளைகள் அனேக பாவங்களைப்பற்றிக் கெட்டுப்போகிறார்கள்; பெண்பிள்ளைகளோவென்றால்: வாய்ப்பாவம், மிதமின்றித் தங்களைச் சிங்காரித்தல், சாஸ்திரம் பார்த்தல், பாவசங்கீர்த்தனத்தில் பாவத்தை ஒளித்தல் ஆகிய இந்த நாலு விசேஷ துர்க்குணங்களால் முக்கியமாய்க் கெட்டுப்போகிறார்களென்று பேர்போன ஓர் பிரசங்கி சொல்லியிருக்கிறார்.

அர்ச். கிறிசோஸ்தோம் சொல்லியிருக்கிறது போல நாம் பாவத்தைச் செய்யாதிருக்கும்படி சர்வேசுரன் நமக்கு வெட்கம் கூச்சத்தைத் தந்



திருக்கிறார்; ஆனால் ஒருக்கால் தப்பித்தவறி யாதொரு பாவத்தில் நிர்ப்பாக்கியமாய் விழுந்துவிட்டால் அதைப்பாவசங்கீர்த்தனத்தில் சொல்லித் தீர்த்துக்கொள்ளும்படி நம்பிக்கையைக் கொடுத்திருக்கிறார். பசாசோவென்றால் சுபாவமான இந்த ஒழுங்கை மாற்றி, மனிதன் பாவத்தைச் செய்யுமுன், அதை அவன் செய்யும்படியிருந்த நம்பிக்கையையும் இன்னும் மனத்துணிவையும் வருவிக்கிறது. ஆனால் அவன் பாவத்தைச் செய்த பிற்பாடு அதைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லாதபடிக்கு அவனுக்குமிருந்த வெட்கத்தையும் கூச்சத்தையும் உண்டுபண்ணி அவன் வாயைக் கட்டிப்போடுகிறது. அதெப்படியென்று அறியவேணுமோ கேள்: வனத்தில் ஒரு முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் தேவாலயத்தில் வெகு சனங்கள் பாவசங்கீர்த்தனத்துக்கு வந்து கூடியிருக்க, அங்கே ஒரு பசாசு ஏதோ வெகு படபடப்பு ஆத்திரமாய் ஒவ்வொரு பாவசங்கீர்த்தனக் கட்டிக்கும் போகிறதும் வருகிறதுமாயிருந்ததை முனிவர் [illegible]திஷ்டியால் கண்டு: இங்கே உனக்கு என்னவேலையென்று கேட்டார். அதற்குப் பசாசு: இதோ இவர்களிடத்தினின்று நான் பறித்ததை உத்த

ரிக்கிறேன். இவர்கள் பாவத்தைச் செய்யும்போது, தாராளமாய்ப் பாவத்தைச் செய்யட்டுமென்று இவர்களிடத்தில் வெட்கத்தைப் பறித்துக்கொண்டேன். இப்போது இவர்கள் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகையில் தங்கள் பாவத்தைச் சொல்லாமல் வாயடைத்துப் போகும்படி பறித்த வெட்கத்தை உத்தரித்துவிடுறேன் என்றது.

சேசுநாதர்சுவாமி ஊமையும் செவிடுமாயிருந்த பேயைத் துரத்தினதாகச் சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிறது. (மாற்கு ௭. ௩௨.) பாவசங்கீர்த்தனத்தில் பாவிக்கு வெட்கத்தை மூட்டி அவன் வாயை அடைத்துப்போடுகிறது இந்த ஊமைப் பசாசுதான். ஆகையால் இது நம்மை வஞ்சித்து மோசம் செய்யாதபடி எச்சரிக்கையாயிருக்கவேணும்.

இப்பேர்க்கொத்த பசாசின் மாய்கையில் நாம் அகப்பட்டு மோசம் போகாதபடி சர்வேசுரன் வேதாகமங்களைக்கொண்டு நம்மை எச்சரித்து உன் ஆத்துமத்தைக் குறித்து உண்மையை சொல்லக் கூசாதே; ஏனென்றால் பாவத்தைப் பிறப்பிக்கிற வெட்கமுமுண்டு, மகிமையையும் தயாளத்தையும் பெறுவிக்கிற வெட்கமுமுண்



என்று நமக்குத் தைரியஞ் சொல்லியிருக்கிறார். (எக்லே. ௪-ம். அதி. ௨௪-ம். வசனம்.)

## II.

பாவத்தை ஒளிப்பதினால் வருகிற பொல்லாப்பு என்ன?

௧-வது. நாம் மேலே சொன்னதுபோல உன் பாவசங்கீர்த்தனம் தேவதுரோகமாய்ப் போகிறது. அதாவது நீ பாவசங்கீர்த்தனத்தில் ஒரே ஒரு பாவத்தை ஒளித்தபோதிலும், நீ வெளிப்படுத்தின மற்றப் பாவங்களுக்குப் பொறுத்தல் அடையாமற் போவதுந்தவிர அதுவல்லாமல் நீ கட்டிக்கொண்டிருக்கிற பாவங்களோடு கூட இன்னும் ஒரு பெரும் பாவத்தையும் கட்டிக்கொள்ளுகிறாய். இப்படி நீ பாவத்தை ஒளித்துக் கள்ளப் பாவசங்கீர்த்தனம் செய்து கனமான பாவத்தைச் சுமந்துகொள்வதை விட நீ பாவசங்கீர்த்தனத்துக்குப் போகாதிருந்தால் உனக்கு அதிக நலமாயிருந்திருக்கும்.

பாவசங்கீர்த்தனத்தில் மனமறிய சிலதைச் சொல்லியும் சிலதைச்சொல்லாமலும் இருக்கும்போது, சொல்லாத பாவங்கள் தவிர, சொன்ன பாவங்களெல்லாம் பொறுக்கப்படுமென்று நினையாதே. இதை உனக்கு விளங்கச் சொல்லு

வோம் கேள்: உன் பாவங்களுக்கு மன்னிப்பு
அடைவதென்றால் என்ன? சர்வேசுரன் உன்
பாவங்களைப் பொறுத்துக்கொண்டு தமக்குச்
சத்துருவும் நரக ஆக்கினைக்குப் பாத்திரமுமா
யிருந்த உன்னைத் தமக்குப் பிரியமுள்ள பிள்
ளையும், சேசுநாதர்சுவாமிக்குச் சகோதரனும்
மோக்ஷத்துக்குச் சுதந்தராளியும், சம்மனசு
களோடு உடன்பங்காளியுமாக உன்னை ஏற்றுக்
கொள்வதுதான் உன் பாவங்களுக்கு மன்னிப்
பு அடைகிறது. இதெல்லாம் உனக்குச் சித்
திக்க வேணுமானால் உன் சகல பாவங்களுக்
கும் நீ மன்னிப்படையவேணும்.

இல்லாதிருந்தால் இது கூடாத காரியம்.
அன்றியும் பாவங்கள் ஒன்றில் எல்லாம் மன்
னிக்கப்படவேணும் அல்லது ஒன்றும் மன்
னிக்கப்படாதிருக்கவேணும். ஒன்று மன்னிக்
கப்படும் இன்னொன்று மன்னிக்கப்படாம
லும் இருப்பது கூடாது. ஏனென்றால் பா
வம் மன்னிக்கப்படும்போது நீ சர்வேசுரனுக்
குப் பிள்ளையாகவும், மன்னிக்கப்படாதிருக்கும்
போது அவருக்குச் சத்துருவாயும் இருக்கிறா
யல்லோ. இப்படியிருக்க ஒரு பாவம் மன்
னிக்கப்படும் ஒருபாவம் மன்னிக்கப்படாம
லுமிருந்தால், ஒரே காலத்தில் நீ சர்வேசுர



னுக்குப் பிள்ளையாகவும் அவருக்குச் சத்துரு
வாகவும் இருக்கவேண்டியது. இது கூடாத
காரியம். ஆகையால் உன் சகல பாவங்களுக்
கும் பொறுத்தல் அடையும்படி உன் சகல பா
வங்களையும் சங்கீர்த்தனம் செய்யவேண்டியது.

இதை நீ இன்னும் அதிக நன்றாய்க் கண்டு
உணரும்படி இந்நாட்டுக்கு வந்த பூர்வீக கு
ருக்களில் ஒருவர் சொல்லியிருக்கிற சங்கதி
யைக் கேள். ஒரு ஊரிலே மூன்றுபேரை வெறி
நாய்கடித்துப்போட்டது. அந்த மூன்று பே
ருக்கும் கெட்டிக்காரனான ஒரே வைத்தியன்
மருந்து செய்தான். அவன் செய்த வைத்தி
யம் என்னவென்றால் நாயின் விஷ நீர் அவர்க
ளுடைய இரத்தத்தில் கலந்து தோஷமுண்டா
காதபடி இரும்பைப் பழுக்கக் காயவைத்து
அவர்களுடைய இரணங்களைச் சுட்டான். க
டிபட்டவர்களில் இரண்டுபேர் தங்கள் காயங்
களையெல்லாம் வைத்தியனுக்குக் காண்பித்து
சுகமானார்கள். மூன்றாம்பேர்வழிக்கு நாலு
காயம் பட்டிருந்தது. அதிலே ஒன்று மறை
வான இடத்தில் இருந்தது. வேதனைக்குப்
பயந்தோ கூச்சப்பட்டோ இவன் அந்தக் கா
யத்தைப்பற்றி ஒன்றும் பேசாமல் மற்ற மூன்
று காயங்களைமாத்திரம் காண்பித்தான். வைத்

தியனும் தன் வைத்தியத்தைச் செய்தான். ஆனால் சுடாத அந்தக் காயமானது கொஞ்சத்துக்குள் விரிந்து படர்ந்து, விஷநீர் இரத்தத்தில் சார்ந்து போனபடியால் அவனுக்கு அகோரமான வெறியும் பைத்தியமும் பிடித்துவிட்டது. அந்த ஸ்திதியில் அவனை அடக்கிவைக்க முடியாததினால் அவன் கைகால்களில் விலங்கு போடவேண்டியதாயிற்று. அதில் அவன் ஓ, ஓ வென்று ஓலமிட்டுக் கத்தி, நுரை நுரையாய்க் கக்கி பல்லை நெறு நெறெனக் கடித்துப் பார்க்கப் பயங்கரமான விதமாய் அடிபட்ட பாம்புபோலத் தேகமெல்லாம் திருக்கி முறுக்கிக் கொஞ்சத்துக்குள் இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியில் செத்தான்.

இதுவே பாவசங்கீர்த்தனத்தில் சாவான பாவத்தை ஒளிக்கிறவனுடைய மெய்யான சாயல். அந்த மூன்று காயங்களைச் சுட்டதும், அதினுண்டான அகோரவேதனையைச் சகித்ததும் இந்த நிர்ப்பாக்கியனுக்கு ஒரு பிரயோசனமும் இல்லாமற் போனதுபோல, தன் பாவங்களில் ஒன்றை விட்டு மற்றதெல்லாம் சொன்னபோதிலும் அதினால் பாவிக்கு ஒரு நன்மையும் ஆவதில்லை. அவன் ஒளித்த அந்த ஒரு பாவத்தினிமித்தமாகவே அவன் சாபத்தை அடைந்



து நித்திய கேட்டுக்குள்ளாவதற்குச் சந்தேகமில்லை.

இது விஷயமாக நாம் வாசித்திருக்கிற ஒரு சரித்திரம் நமது ஞாபகத்தில் வருகிறது. சில விசை உனக்கும் அது தெரிந்திருக்கலாம். ஆயினும் இன்னும் ஒருவிசை அதைக் கேட்கிறது உனக்கு நன்மையில்லாமற் போகாது. ஆகையால் அதைச் சொல்லுகிறோம்; கேள். கப்புசின் சபையைச்சேர்ந்த இரண்டு குருக்கள் ஏதோ திருயாத்திரையாய்ப் பிரயாணம் செய்யும்போது ஒரு பட்டணத்தில் சேர்ந்து, தேவநற்கருணை சந்திக்கும்படி அவ்விடத்துத் தேவாலயத்தில் பிரவேசித்தார்கள். அப்படி அவர்கள் பீடத்துக்கு முன் வேண்டிக்கொண்டிருக்கும்போது ஒருவன் வந்து அவர்களிருவரில் ஒருவரைநோக்கி: சுவாமீ, ஒரு அம்மாள் உங்களிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்துகொள்ள வேணுமென்று கேட்டுக்கொள்வதாகச் சொன்னான். இது அதிசயமல்ல, ஏனென்றால் சில சமையங்களிலே சிலர் தங்களை அறிந்த குருக்களிடத்தில் பாவசங்கீர்த்தனஞ் செய்யக் கூச்சப்பட்டு, தங்களை அறியாத யாதொரு குருவானவர் வந்தால் அவரிடத்தில் தங்கள் பா

வங்களை வெளிப்படுத்தித் தங்கள் ஆத்தும காரியங்களைச் சீர்ப்படுத்திக்கொள்வது உண்டு. தங்களை அறிந்த குருக்களிடத்தில் கூச்சப்பட்டுக் கள்ளப் பாவசங்கீர்த்தனம் செய்வதைவிட, அறியாத குருக்களிடத்தில் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்துகொள்வது நன்மையே அல்லாமல் தின்மை அல்ல, இது நிற்க.

அந்தக் குருவானவர் நல்லதென்று சம்மதித்துப் பாவசங்கீர்த்தனம் கொடுக்கப்போனார். கூடவந்த குருவானவர் அவர் வருமட்டும் செபம் செய்துகொண்டு காத்திருந்தார். இப்படி இருக்கையில் அந்தப் பெண்பிள்ளை தன் பாவங்களைச் சொல்லச்சொல்ல மகா அசங்கித அருவருப்பான தவளைகளும் பாம்புகளும் அவள் வாயிலிருந்து கீழே விழுந்து ஒன்றுக்குப்பின் ஒன்றாய் வரிசையாக கோவில் வாசலை நோக்கிப்போவதைச் செபம் செய்துகொண்டிருந்த குருவானவர் கண்டு இதுகளில் ஒவ்வொன்றும் அவள் சொன்ன ஒவ்வொரு பாவத்துக்கு அடையாளமென்று எண்ணிக்கொண்டார். அப்போது திடீரென ஒரு பெரிய அவலட்சணமான தவளை அவள் வாயை விட்டு வெளியேவர முட்டி மோதிப் பார்த்தும் வரமாட்டாமல் திரும்பவும் உள்ளே போய்விட்டது. ஆ



னால் குருவானவர் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுக்கும்போது, முந்தி வெளியே போன சகல அரிகண்டமான தவளை பாம்புகளும் அத்தோடு இன்னொரு பெரிய அவலட்சணத் தவளையும் அவள் வாய்க்குள் புகுந்தது. அதைக்கண்டு அவர் எவ்வளவு திகிலும் ஆச்சரியமும் அடைந்தாரென்று சொல்லத்தக்கதில்லை.

பாவசங்கீர்த்தனம் முடிந்தான பிற்பாடு அவ்விரு குருக்களும் தேவாலயத்தை விட்டுப் புறப்பட்டு நடந்த சங்கதிகளைப்பற்றி ஒருவரோடொருவர் பேசத் துணியாமல் தங்கள் பயணத்தைத் தொடர்ந்து போனார்கள். ஆயினும் மூன்று நாளுக்குப் பிறகு அந்த அவலட்சண மிருகங்களைக் கண்ட குருவானவருக்கு அவைகளின் அர்த்தம் சரியாய் விளங்கலாச்சுது. எப்படியென்றால் மேற்சொல்லிய அந்தப் பெண்பிள்ளை திடீரெனச் செத்து சர்வாங்கமும் நெருப்புப்பற்றி பெரிய துஷ்ட மிருகங்களால் பீறிக்கிழிபடுகிறவளாய்த் தான் பாவசங்கீர்த்தனம்செய்த குருவானவருக்குத் தோன்றி: என் பாவங்களுக்குள்ளே அதிக பெரியதும், அதிக வெட்கத்துக்குரியதுமான ஒரு பாவத்தைச்

சொல்ல நான் துணியாததினாலே, நான் சபிக்கப்பட்டு நரகத்தில் விழுந்து கிடக்கிறேனென்றும், நாம் மேலே சொன்ன, நாலுவகைப் பாவங்களாலே அனேகமாய்ப் பெண் பிள்ளைகள் கெட்டு நரகத்திலே விழுகிறார்களென்றும் சொல்லி மறைந்துபோனாள்.

௨-வது. இப்படிக் கள்ளப் பாவசங்கீர்த்தனஞ் செய்தவன் அந்தப் பாவசங்கீர்த்தனத்தில் தான் சொன்னதையும் ஒளித்ததையும் அது முதல் தான்செய்த மற்றச் சகல சாவானபாவங்களையும் நல்ல பொதுப்பாவசங்கீர்த்தனத்தில் சொல்லித் தீர்த்துக்கொள்ளாதேபோனால் ஒருக்காலும் பாவப்பொறுத்தல் அடையமாட்டான். ஒருவிசை பாவத்தை ஒளித்துக் கள்ளப்பாவசங்கீர்த்தனஞ் செய்த பிற்பாடு, மறுபாவசங்கீர்த்தனங்களில் அந்தக் கள்ளப் பாவசங்கீர்த்தனத்தைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் அதற்குப் பின் செய்த பாவங்களையெல்லாம் உண்மையாகச் சொல்லியிருந்தபோதிலும், முந்தினபாவங்களுக்குப் பொறுத்தல் கிடையாததுபோல இந்தப் பாவங்களுக்கும் பொறுத்தல் கிடைப்பதில்லை. அன்றியும் அந்தப் பாவசங்கீர்த்தனத்தைப்போலவே இந்தப்பாவசங்கீர்த்தனங்களும் வாங்கும் திவ்விய நன்மையும் எல்லாந் தேவ



துரோகமாயிருக்கும். ஆகையால் அந்தக் கள்ளப்பாவசங்கீர்த்தனத்தில தான் சொன்னதையும் மறைத்ததையும், அதன்பின் செய்த பாவசங்கீர்த்தனங்களையும் வாங்கின தேவதுரோகமான நன்மைகளையும் செய்த மற்றச் சகல சாவான பாவங்களையும் சொல்லிப் பொதுப்பாவசங்கீர்த்தனஞ் செய்யவேண்டியது. ஐயோ! இது எவ்வளவு சங்கடம்! இந்த நிர்ப்பாக்கியத்தை ஒரு ஆத்துமம் சரியாய்க் கண்டுபிடிக்குமானால் பாவசங்கீர்த்தனத்தில் ஒரு பாவத்தையாவது ஒளிக்கத் துணியுமா?

௩-வது. கள்ளப் பாவசங்கீர்த்தனஞ் செய்கிற ஆத்துமத்துக்கு எவ்வளவு மனோவாதையும், கலக்கமும், மனச் சாட்சியின் கண்டனமும் உண்டாகுமென்று யாரால் அளவிட்டுச் சொல்லக்கூடும்? ஐயோ! அந்த ஆத்துமத்தின் வாதை எப்பேர்க்கொத்த வாதை! நல்ல மனதுடைய ஆத்துமாக்கள் முதலாய்ச் சிலசமயங்களிலே தங்கள் அற்ப சொற்பப்பாவங்களைச் சரியாய்ச் சொன்னோமோவென்று சந்தேகித்துக் கலங்கும்போது, வஞ்சகமாய்ப் பாவத்தை ஒளிக்கிறவர்களை மனச்சாட்சியும் தேவதீர்வையும் சும்மா விட்டு விடுமா? அவன் பாவம் இராப் பகலாய் அவன் கண் முன்பாகவே நிற்கும்.

ஐயோ! இப்போது இந்த நிர்ப்பாக்கிய ஸ்திதியிலே எனக்குச் சாவு வந்தால் என்னமாய்ப் போவேனென்று ஏங்கித் தியங்குவான். சர்வேசுரனை மகாக் கண்டிப்புள்ள நடுவனென்று எண்ணிக்கொண்டு அவர்கையில் ஒருநாளைக்கு அகப்படத்தான் போகிறேனென்று நினைத்து நடுநடுங்குவான். ஆயினும் அவன் தன்னிர்ப்பாக்கிய ஸ்திதியை உணர்ந்திருந்தாலும், அதைவிட்டுத் தப்பவேணுமென்று பார்த்தாலும், பசாசு அவனை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறது. அதுக்குத் தப்பித்துக்கொள்ள வருகிறதற்கு அவனுக்குச் சக்தியில்லாததுபோல் தோன்றுகிறது. ஆயினும் அவன் எவ்வளவுக்கு அதிக தாமதஞ் செய்வானோ அவ்வளவுக்கு அவன் பேரில் பசாசுக்கு அதிக பெலனும், அவனுக்குப் பெலவீனமும் உண்டாகிவிடும்.

௪-வது. கள்ளப்பாவசங்கீர்த்தனஞ் செய்கிற நிர்ப்பாக்கிய கிறீஸ்துவனுக்கு வருகிற மற்றொரு பொல்லாப்பு என்னவென்றால், அவன் கள்ளஞானியும் வேஷகாரனுமாய்ப் போனான். அவனுக்கு நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொள்ளவுந் துணிவில்லை. பாவசங்கீர்த்தனம் செய்து திவ்வியநற்கருணை வாங்காதிருக்கவுந் தைரியமில்லை. இன்றைக்குத் திருநாளாச்சுதே!



மற்றவர்கள் ஆயத்தமாய்ப் போகும்போது நான் போகாதிருக்கலாமா? மற்றவர்கள் தலை வெள்ளிக்கிழமை அனுசரிக்கிறார்களே: நான் சபைக்காரனாயிருந்தும் அனுசரியாதிருக்கலாமா? இல்லாவிட்டால் மற்றவர்கள் என்மேல் என்ன நினைப்பார்களோ? என்று இவ்வித எண்ணங்களை முன்னிட்டு அந்த நிர்ப்பாக்கிய ஆத்துமம் தேவதுரோகத்தின்மேல் தேவதுரோகத்தைக் கட்டிக்கொள்ளும். இப்படித் தேவநற்கருணை வாங்கும்போதெல்லாம் அர்ச். சின்னப்பர் சொல்லியிருப்பதுபோல தன் சாபத்தையே உட்கொள்ளுகிறது.

௫-வது. இப்பேர்க்கொத்த கள்ளஞானிக்குச் சாவு திடீரென நினையாதநேரத்தில் வரவே, அவன் கணக்கற்ற தன் பாவச்சுமையோடு தேவநீதிச்சிம்மாசனத்தின் முன்பாகக் கொண்டுபோய் நிறுத்தப்படுவான். இந்தப் பாவங்களையெல்லாம் சேசுநாதர்சுவாமிக்குப் பதிலாயிருக்கிற குருவானவரிடத்திலே பாவசங்கீர்த்தன இரகசியத்திலே வெளிப்படுத்தியிருந்தால் அதுகளெல்லாம் ஒருவருக்குந் தெரியாமல் மறைந்துபோயிருக்கும். ஆனால் அவன் அந்தரங்கத்திலே ஓரொரு குருவானவரிடத்தில் வெளிப்படுத்த

பயப்பட்ட அந்தப் பாவங்களெல்லாம் ஒருநாள் பொதுத்தீர்வையிலே தாய் தகப்பன் பிள்ளைகள் சிநேகிதர் சுற்றத்தார் முதலிய சர்வலோக ஜனங்களும் அறிய வெளிப்படுத்தப்படும். ஆ! பாவி, ஒரு குருவானவர் உன் பாவத்தை அறிந்தால் என்ன நினைப்பாரோ வென்று கூச்சப்படுகிறாயே, சர்வ ஜனங்களுக்கும் முன்பாக உன் பாவங்களெல்லாம் வெளியாகும்போது உனக்கு என்னமாயிருக்கும்! அந்த அவமான வெட்கத்தைப் பாவி தாழமாட்டாமல், மலைகளே, குன்றுகளே என்மேல் விழுந்து என்னை நசுக்கிப் போடுங்களென்று கூவுவான். ஆயினும் சுவாமி அவனைச் சும்மா விடமாட்டார். இதோ! நாம் உனக்கு விரோதமாயிருக்கிறோம். உன் கண்முன்பாக வெட்கத்தை வெளியாக்கி, உன் ஈங்கிஷத்தை சகலஜாதி ஜனங்களுக்கும் உன் வெட்கத்தை இராச்சியங்களுக்கும் அறியப்படுத்துவோமென்று அவரே தமது தீர்க்கதரிசியாகிய நாகூம் என்பவர் வாயால் வெளிப்படுத்தியிருக்கிறார்.

சொற்ப வெட்கத்துக்குப் பயந்து பின் வாங்குகிறதினால் பின்னுக்கு எவ்வளவு வெட்கமாகிறதென்று அறியும்படி ஸ்பேயின் தேசத்தில்



பிரசங்கியாயிருந்த ஒரு குருவானவர் சொல்லியிருக்கிற வர்த்தமானமாவது: நல்ல கோத்திரத்திலே பிறந்த வாலிபப்பெண் ஒருநாள் ஒரு குற்றத்தில் விழுந்துவிட்டாள். கொஞ்சநாளைக்குள் அவளிருந்த விதத்தின்மேல் தாய்க்குச் சந்தேகமுண்டாகி அப்படி ஏதாவதிருந்தால் மகளை வேறே இடத்துக்கு அனுப்பிக் குலத்துக்கு இழிவுவாராதபடி செய்யவேணுமென்று விரும்பி, மகளை இரகசியத்தில் கூப்பிட்டு விசாரித்தாள். மகள் ஒரே சாதனையாய்ச் சாதித்துவிட்டாள். கடைசியாய் இது சங்கதியைச் சகலரும் அறிந்து சீ யென்று இகழும்படி பிரசித்தமாய் அவள் பிரவசமாகி ஒரு குழந்தையைப் பெற்றாள். இதினால் அவளுக்கும் அவள் கோத்திரத்திற்கும் எவ்வளவு ஈனம் அவமானமாச்சுதென்று சொல்லிமுடியாது. பாவ சங்கீர்த்தன விஷயத்திலும் இப்படித்தான். உன் பாவத்தை ஒரு குருவானவரிடத்தில் சங்கீர்த்தனம் செய்யும்போது உனக்குக்கொஞ்சநேரம் வெட்கமாயிருக்கும்; மெய்தான். இதுக்குப் பின்வாங்கி ஒளித்துப் போட்டாயானால் உனக்கு நித்திய கேடும், அத்தோடு நித்திய அவமானவெட்கமும் வரும்படி நீயே வழிபண்ணிக்கொள்ளுகிறாய்.

# III.

**எத்தனை விதமாகப் பாவத்தை மறைக்கிறார்கள்?**

க-வது. எண்ணிக்கையில் பொய்சொல்லி மறைப்பார்கள். அப்படியே பன்னிரண்டு பாவஞ்செய்திருக்க, ஐந்து அல்லது ஆறு என்றால் பொய்யாய்ப்போகும்.

உ-வது. நீ சிறு பிள்ளையாயிருக்கும்போது மற்றச்சிறுவரோடு நீ செய்திருக்குங் குற்றங் தப்பிதங்கள் உன் ஞாபகத்திலிருந்தாலும் அந்தக் காலத்தில் அவைகள் பாவங்களென்றும் கனமிக்கு ஏறுத துரோகங்களென்றும், அந்தக் குற்றங்களைச் செய்தால் நரகத்துக்குப் பாத்திரமாய்ப் போவாயென்றும் உனக்கு நன்றாய்த் தெரிந்திருந்தபோதிலும், அந்தப் பாவங்களை நீ தெளிவாய்ச் சொல்லாமல், என்னமோ அந்தக் காலத்திலே, தெரியாத காலத்திலே செய்த பாவமென்று போக்குச் சொன்னால் பொய்யாய்ப்போகும்.

ங-வது. ஒரு பாவத்தின் குணத்தை மாற்றி இன்னொரு விசேஷ அக்கிரமத்தைச் சேர்க்கிற சங்கதியை மறைத்தால் பாவசங்கீர்த்தனம் பொய்யாய்ப்போகும். அவ்விதமே ஒரு பாவத்



தைக் கலியாணக்காரரோடு அல்லது கோவில் முதலிய திருஸ்தலத்திலே செய்திருக்க, இதைச் சொல்லாமல், இன்னபாவத்தைச் செய்தேனென்று மாத்திரம் சொன்னால் பொய்யாயிருக்கும்.

ச-வது. செய்தது பெரிய அக்கிரம பாவமாயிருக்க, இன்னதென்று விவரமாய்ச் சொல்லாமல், பொதுவில் கெட்ட செய்கை, கெடுதியான நினைவு, சிநேகப்பழக்கமென்று சொன்னால் போதாது; பொய்யாயிருக்கும்.

ரு-வது. [illegible] துர்நினைப்புகளில் நீ புத்தியைச் செலுத்திச் சந்தோஷப்பட்டிருந்தும் உன்னை அறியாமல வந்த நினைப்பேயொழிய வேறில்லையென்பாயானால் பொய்யாகும்.

சா-வது. பாவத்துக்கு ஏதுவான சமையத்தில் நீ இருந்துகொண்டு அதாவது நீ பாவத்தில் விழுவதற்கு ஏதுவான ஆள் பொருள் முதலியவைகள் உன் வசத்திலிருக்க நீ அந்த ஆளை, அல்லது பொருளை நீக்காமலும், அதைச் சொல்லாமலும் இருப்பாயானால், உன் பாவசங்கீர்த்தனம் பொய்யாயிருக்கும்.

எ-வது. இதினாலே யாதொருவருக்கும் ஒரு கெடுதியும் இல்லாததினாலே இது பாவமென்று

நான் நினைக்கவில்லை. இதை நான் செய்யும்போது பாவத்தைச் செய்யவேணுமென்று நினைத்துச் செய்யவில்லையென்று இப்படிப்பட்ட போக்குகளைக் கபடமாய்ச் சேர்த்துச் சொன்னால், உன் பாவசங்கீர்த்தனம் கள்ளப்பாவசங்கீர்த்தனமாய்ப் போகும். இவ்விதமாக நீ குருவானவரை ஏய்த்தாலும், சர்வேசுரனையும் ஏய்த்துப்போடுவாயோ? அல்லது இருக்கட்டும். நீ அதைச் செய்யும்போது அது பாவமாயிருக்குமென்று சற்றாவது உனக்குச் சந்தேகம் உண்டாகவில்லையோ? அந்தச் சமயத்தில் உன் மனச்சாட்சி உன்னைக் குத்தி, இதைச் செய்யப்படாதென்று உன் மனதில் கலக்கத்தை எழுப்பவில்லையோ? ஆனால் வாஸ்தவமாகவே நீ அது குற்றமென்று நினையாதிருந்தால் அது உனக்குக் குற்றமாகமாட்டாதுதான். ஆனால் உன் மனச்சாட்சி உன்னை எவ்வளவாக உபாதித்தும் அதை நீ கவனியாமல், அந்தக் காரியத்தைச் செய்திருந்தால் சர்வேசுரனுக்கும் உன் மனச்சாட்சிக்கும் நீ குற்றவாளிதான்.

௮-வது. இதை நானாகச் செய்யவில்லை; இன்னொருவன் என்னை மயக்கிப்போட்டான்;



என்பேரில் குற்றமில்லையென்பாயானால் பொய்தான், ஏனென்றால் இன்னொருவனுடைய துர்ப்புத்தி துர்மாதிரிகை அலட்டுக்கு நீ இடங்கொடுத்துப் பாவத்தைச் செய்திருந்தாலும் உன்பேரில் குற்றமில்லாமல் போகுமோ? அந்த ஆள், அந்த இடம் பாவத்துக்கு ஏதுவானதென்று தெரிந்திருந்தும் ஏன் உன்னை ஆபத்துக்குக் கையளித்தாய்? வஞ்சக சிநேகிதருடைய இச்சகப் பேச்சுக்கு ஏன் காதுகொடுத்தாய்? உன்னைக்கெடுத்தவனுக்கு மகாப்பெரிய பாவமென்றாலும், உன்பேரில் சற்றும் பாவமில்லையென்று சொல்லவும்படாது; உன் பாவத்தைச் சங்கீர்த்தனம்பண்ணாமல் இருக்கவும்படாது. ஏழாம் கற்பனைக் காரியத்தைப் போலவே ஆறாங் கற்பனைக் காரியமுமென்று அறிந்துகொள். நீ ஒருவனுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு இன்னொருவனுடைய வீட்டில் நெருப்பு வைத்துவிட்டால், ஒருவனுடைய சொத்தைத் திருடிக்கொண்டால் தேவசமுகத்தில் நீ குற்றவாளியாகமாட்டாயோ? மனிதரும் உன்னைச் சும்மா விட்டுவிடுவார்களோ? அதில்லையே. அது போலவே உன் மானத்தையும் கற்பையும் உன்னிடத்தில் பறிக்கத் தேடினவனுக்கு நீ

பேதைத்தனமாய் இடங்கொடுத்தால் உன்பேரில் குற்றமில்லாமல் போகாது.

௯-வது. உன் பாவங்களின்பேரில் உனக்கு நல்ல ஞாபகம் இருந்தாலும், மறந்துபோனதாகப் பாசாங்கு செய்தால் உன் பாவசங்கீர்த்தனம் தகாத பாவசங்கீர்த்தனமாகும்.

௰-வது. உன் நியாயமற்ற வீண்செலவுகளைச் சுருக்கி மாசமாசம் சற்றுவது மிச்சம் பிடித்து, நீ திருடினதை உத்தரிக்கவும், உன்னால் பிறருக்கு நேர்ந்த பொருள்நஷ்டத்துக்குப் பரிகாரம் செய்யவும் கூடுமாயிருந்தும், என்னால் உத்தரிக்கக் கூடாதென்பாயானால், உன் பாவசங்கீர்த்தனம் கள்ளப் பாவசங்கீர்த்தனமாகும்.

இதுவரையில் பாவசங்கீர்த்தனத்துக்குப் போகிறவன் எப்படித் தன் பாவங்களை உபாயமாய் மறைத்துக் குருவானவரையும் ஏய்த்துக் கள்ளப்பாவசங்கீர்த்தனம் செய்யக்கூடுமென்று சில சங்கதிகளை எடுத்துக் காண்பித்தோம்.

## IV.

இப்போது சிலர் கள்ளப்பாவசங்கீர்த்தனம் செய்வதற்குச் சொல்லுகிற போக்குகளில் சிலவற்றை எடுத்துக் காண்பிப்போம்.



௧-வது. சிலர் சொல்வது: என் பாவங்களையெல்லாம் சொன்னால் சிலவிசை குருவானவர் பாவப்பொறுத்தல் கொடுக்கமாட்டாரென்று பயமாயிருக்கிறது.

ஏன் இப்படிப் பயப்படுகிறாய்? ஒருவன் நல்ல ஆயத்தமாயிருந்தால், அதாவது பாவத்தின்பேரில் மெய்யான மனஸ்தாபமும் இனிமேல் அப்படிச் செய்யமாட்டேனென்கிற உறுதியான மனதும் இருந்தால் பாவப்பொறுத்தல் அவனுக்கு இல்லையென்னப்படாதே. அவனுக்குப் பாவப்பொறுத்தல் கொடுப்பது குருவானவருக்குக் கடன். ஆனால் ஒருவனுடைய மன உறுதியைச் சோதிக்கும்படி. எப்போதாவது சில சமயம் சொற்பக்காலத்துக்குப் பாவப்பொறுத்தல் கொடாமல் நிறுத்திவைத்திருந்தாலும் எப்போதும் இப்படி நிறுத்துவதில்லை. ஆகையால் நீ எத்தனை பாவங்களைச் செய்திருந்தாலும், உன் பாவங்கள் எத்தனை கன தோஷங்களாயிருந்தாலும், நீ நல்ல ஆயத்தமாயிருந்தால், பாவப்பொறுத்தல் பெற்றுக்கொள்ள உனக்குப் பாத்தியமுண்டு, உனக்கில்லையென்னப்படாது.

தவிரவும், நீ பாவத்தை ஒழிக்கும்போது உன் ஆத்துமத்துக்கு அதிக பாவமும் கெடுதியும் உண்டாகுமென்றிருக்க, பாவப்பொறுத்தல் பெற்றுக்கொள்ளும்படி பாவத்தை ஒழிக்கலாமா? அப்பேர்க்கொத்த பொறுத்தலைப் பெற்றும் உனக்கு ஆவதென்ன?

௨-வது. நான் பாவசங்கீர்த்தனம் செய்து வருகிற குருவானவர் என்னை நன்றாய் அறிந்தவர். நான் என் பாவமெல்லாம் சொன்னால் என்பேரில் குறைவான எண்ணங்கொள்வார்.

உன்னை அறிந்த குருவானவரிடத்தில் பயந்து கூச்சப்பட்டு பாவத்தை ஒளித்துக் கள்ளப்பாவசங்கீர்த்தனம் செய்வதைவிட, உன்னை அறியாத ஒரு குருவானவரிடத்தில் போக உனக்கு சமயங்கிடைத்தால் அவரிடத்தில் போய் உன் ஆத்தும காரியங்களை ஒழுங்குபடுத்திக்கொள்வது அதிக நன்மையேயொழிய தின்மை அல்ல.

ஆனால் உன்னாத்தும குருவானவர் உன் குற்றங்களையெல்லாம் அறிந்தால் உன்பேரில் குறைவான எண்ணங்கொள்வார் என்கிறாயே, அது பிசகு. ஒருவன் தன் வெட்கம் பயமெல்லாம் விட்டுத் தன்னைச் செயித்து நல்லபாவ



சங்கீர்த்தனம் செய்வதைக் கண்ட குருவானவர், அவன்மேல் குறைவான எண்ணங்கொள்வாரானால் அவர் நல்ல குருவல்ல. இப்படி அவர் உன்மேல் நினைப்பாரோவென்று சந்தேகப்படாதே. இதற்கு விரோதமாக நீ நல்லபாவசங்கீர்த்தனம் செய்யும்படி வேண்டிய தைரியத்தை உனக்குத் தந்த சர்வேசுரனுக்கு அவர் தோஸ்திரம்செய்து, சந்தோஷித்து ஆறுதல் அடைவார்.

[illegible] என் ஜீவியம் எவ்வளவோ நிர்ப்பாக்கியமானது. என் பாவமெல்லாம் கேட்கவேணுமானால் குருவானவர் களைத்துச்சலித்துப் போவாரோ, ஆகையால் சிலதைவிட்டுச் சொன்னாலென்ன?

அப்படியல்ல, உன்பாவசங்கீர்த்தனம் எவ்வளவுக்கு நீட்டமா இருக்குமோ அவ்வளவுக்குக் குருவானவருக்கு அதிக பேறுபலனுண்டு. சந்தைக்கடையில் வெகுபேர் வியாபாரத்துக்கு வருகிறார்களென்றும் அவர்களெல்லாருக்கும் சரக்கு எடுத்துக்கொடுப்பது களைப்பாயிருக்கிறதென்றும் எங்கேயாவது வியாபாரி முறைப்பட்டதுண்டா? அதில்லையே, ஏனென்றால் பிரயாசம் எவ்வளவோ அவ்வளவுக்கும் அவனுக்கு

இலாபமாகிறது. அன்றியும் பாவசங்கீர்த்தனம் கேட்டுக் குருக்களுக்கு அப்பியாசமுண்டே; ஆகையால் சிலவிசை உனக்கு இரண்டு மூன்று நாழிகை பிடிக்கிற சங்கதியை அவர்களுடைய உதவியால் அரைநாழிகைக்குள் முடித்துக்கொள்ளலாம். அவ்விதமே நாம், இருபது, முப்பது, ஐம்பது வருஷத்துப் பாவசங்கீர்த்தனங்களை முதலாய் அரை நாழிகைக்குள் கேட்டு முடித்திருக்கிறோம். ஆகையால் நீ வெகு நேரம் பிடிக்குமென்றும், ஒருவேளை குருவானவர் களைத்துப்போவாரென்றும் யோசிக்கத் தேவையில்லை.

௬-வது. என் பாவங்களைப்போல உலகத்திலே ஒருவராவது செய்திருக்கமாட்டார்களே. அவ்வளவு அசங்கித கொடுமையான பாவங்களையெல்லாம் நான் செய்திருக்க, அவைகளையெல்லாம் நான் எப்படிச் சொல்லப்போகிறேன்!

பயப்படாதே, நீ அந்தப்பாவங்களைச் செய்யுமுன், அதுகள் பாவங்கள் அல்லவென்றும் அல்லது வெகு சொற்பக் காரியங்களென்றும் உனக்குத் தோற்றுவித்த அந்தப் பசாசுதா[illegible] இப்போது உனக்கு இந்த விகாரமான [illegible]



புக்களை வருவித்து உன்னைக் கலக்குகிறது. அதைச் சீ யென்று வெறுத்து, அதைப் பொய்யனென்றும் பொய்க்குத் தகப்பனென்றும் தள்ளிவிடக்கடவாய். என் பாவங்களைப்போல உலகத்திலே ஒருவராவது செய்திருக்கமாட்டார்களென்கிறாயே. இது நம்பத்தக்கதில்லை. ஆயினும் நாம் இதுவரையில் ஒருவிசையாவது கேட்டிராத ஒரு பாவத்தை நீ சங்கீர்த்தனம் பண்ணுவாயானால் உனக்காகப் பன்னிரண்டு பூசை செய்து ஒப்புக்கொடுப்பதாக வாக்குக் கொடுக்கிறோம்.

௭-வது. ஓ! என்னுடைய பாவத்தின் கனத்தையும் எண்ணிக்கையையும் குருவானவர் கேட்டால் பயந்து பிரமித்துப்போவாரே, அப்போது எப்படிச் சொல்லுகிறது!

பிரிய சகோதரமே, கலங்காதே, பாவசங்கீர்த்தனம் கேட்டு அப்பியாசப்பட்டிருக்கிற குருக்களுடைய வார்த்தையை நம்பு. குருவின் பாதத்திலே ஒரு ஆத்துமம் வந்து விழுந்து: சுவாமீ! நான் பாவி, வெகுவாய்த் தவறிக் கெட்டுப்போனேன். என் உடலெல்லாம் பாவப் புண்ணும் இரணமுமா யிருக்கிறது. என் ஆத்துமத்தில் கலக்கமும் ஏக்கமுமொழிய,

கொஞ்சமாகிலும் ஆறுதலில்லையென்குமானால், அவருக்கு ஆக்கிரமும் கோபமும் உண்டாகுமோ? இல்லை இல்லை. அதற்கு விரோதமாய் அவருடைய மனது இரக்கத்தால் உருகி இளகிப்போகும். ஏனென்றால் அவர் பாவியைத் தேடிவந்து பாவிக்கு அவ்வளவு தயாளத்தைக் காண்பித்த சேசுநாதருடைய சீஷனல்லவா? அவருடைய ஸ்தானத்தில் இருக்கப்பெற்றவரல்லவா? தயாளத்துக்குப் பாவசங்கீர்த்தனமேயல்லாமல் நீதியைச் செலுத்துவதற்குப் பாவசங்கீர்த்தனமல்ல. ஆகையால் அவருக்கு ஆக்கிரமும் அருவருப்பும் உண்டாகமாட்டாது. நீ வைத்திய சாலைகளுக்குப் போய்ப் பார்த்ததில்லையா? அங்கே இரசர் முதலிய இரணவைத்தியர் கத்திகளை எடுத்துச் சதை எலும்புகளை அறுத்துக் கைகால்களைவாங்கினாலும் சீழ்சலங்களைக் கழுவி, புண்களைச் சுட்டாலும் சற்றாவது அருவருப்பைக்காண்பியாமல் எல்லாம் மனச்சகிப்பாய்ச் செய்துவருகிறார்களே ஏன்? ஏனென்றால் அந்த மாதிரிவேலை அவர்களுக்கு அப்பியாசமாய்ப் போய்விட்டது. அப்படியே குருக்களும் ஞான வைத்தியர்களானதினால் அவர்களுக்கு ஆத்தும வியாதிகளை விசாரிப்ப



தில் ஒன்றும் அதிசயத்தையும் அசங்கிதத்தையும் வருவிக்கமாட்டாது.

௯-வது. அப்படியானால் என்னத்துக்குப் பாவத்தின்மேல் அவ்வளவு பயங்கரமாய்க் குருக்கள் பிரசங்கஞ் செய்கிறார்கள்? சனங்களைப் பயப்படுத்தித் துரத்தத்தானே.

இல்லை. அவர்கள் ஆசிக்கிறதெல்லாம் கூடி உனக்குப் பாவத்தின்மேல் பயமுண்டாகவும், உன் பாவங்களை நீ சங்கீர்த்தனஞ் செய்து தீர்த்துக்கொள்ளவேணுமென்பதுந் தான். நீ பாவத்தோடிருக்கும்போது உன் ஆத்துமம் மகா நிர்ப்பாக்கிய ஸ்திதியிலிருக்கிறது. அதை உணர்ந்து நீ நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்துகொள்ளும்படியாகத்தான் அவர்கள் அவ்வளவு பிரயாசப்படுகிறார்கள். குளத்தில் மீன் பிடிக்கிறவர்கள் இருபக்கமும் வலைகளைக் கட்டி, மீன்கள் வலையில்ப்போய் விழும்படி தண்ணீரை அடித்துக் கலக்குகிறது எவ்விதமோ, அவ்விதமே பாவிகளை இரட்சிக்கத் தேடுகிற குருக்கள் அவர்களைப் பாவசங்கீர்த்தனத்துக்குக் கொண்டுவரும்படிக்குப் பாவத்தின்மேல் அவர்களுக்குப் பயமும் கலக்கமும் உண்டாகும்படி பிரயாசப்படுகிறார்கள்.

எ-வது. இனிமேல் எல்லாஞ் சொல்லி நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்துகொள்வேன். இப்போதைக்கு எப்படியாவது நடக்கட்டும்.

இது மகா அபத்தமான எண்ணம். இனிமேலைக்கு என்கிறாயே, வருங்காலம் உன் கையிலிருக்கிறதோ? நாளை உயிரோடிருப்போமென்று உனக்கு நிச்சயமுண்டோ? பாவத்தை எல்லாஞ் சொல்வதற்கு இன்றைக்கு உனக்கில்லாத தைரியம் நாளை உனக்கு எப்படி வரும்? நாள் போகப் போக உனக்கு வருத்தம் அதிகம் ஆகுமேயல்லாமல் குறைவாகமாட்டாது. இப்படி எண்ணியிருந்தவர்கள் எத்தனையோ பேர் மோசம் போனார்கள்.

அ-வது. சாகிற சமயத்திலே எல்லாத்தையுஞ் சொல்லி நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்துகொள்வேன்.

தம்பி, நான் சொல்வதை நம்பு. உன்னைப் போல்ச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் அநேகர். அவர்கள் இப்போது நரகத்தில் கிடந்து வேகிறார்கள். ஏனெனில் சாகிற சமயத்திலே முதலாய் அவர்களுக்கு நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்யத் தைரியமில்லாமற் போயிற்று.



இதன்மேல் நடந்த சங்கதிகளைக் கேள். சில வருஷத்துக்கு முன் நாமே லீவு காலத்தில் உலாவும்படி ஒரு ஊருக்குப் போயிருந்தவிடத்தில் ஒரு மனிதன் சாகக்கிடக்கிறானென்றும் கடுமையால் அவஸ்தைப் பூசுதல் பெற்றுக்கொள்ள விரும்புகிறானென்றும் நமக்கு அறிவித்தார்கள். அவ்வூர்ப் பங்குச்சுவாமி அன்று காலமே அவனுக்குப் பாவசங்கீர்த்தனமும் அவஸ்தை நன்மையும் கொடுத்துவிட்டு வேறே ஊருக்குப் போய்விட்டதினாலே, நாம் நல்லதென்று சம்மதித்து அவனிடத்திற்குப் போனோம். அவன் நம்மைக் கண்டவுடனே, சுவாமீ, உங்களிடத்திலே தனித்துக் கொஞ்சம் பேசிக்கொள்ளவேணுமென்று கேட்டுக்கொள்ள, நாம் மற்ற ஜனங்களை அப்புறப்படுத்தி என்ன சங்கதியென்று விசாரித்தோம். அப்போது அவன் தன் பங்குச் சுவாமியார் தன்னையறிந்தவராயிருந்தபடியினாலே அவரிடத்தில் சொல்லக் கூச்சப்பட்டு ஒழித்து வைத்திருந்த தன் நிர்ப்பாக்கிய பாவங்களையெல்லாம் வெளிப்படுத்தி, இந்த வெட்கத்தினாலேதான் இன்று காலமேயும் கள்ளப் பாவசங்கீர்த்தனஞ் செய்து, தேவதுரோகமாய் நன்மை வாங்கினதாகச் சொன்னான்.

இதெல்லாங் கேட்டுமபோது நமக்குத் திடுக்கென்றிருந்தாலும், இப்பேர்க்கொத்த பாவி உயிர் விடுமுன் மனந்திரும்பும்படி நம்மை அந்த ஊருக்குக் கொண்டுவந்த சர்வேசுரனுடைய அளவில்லாத இரக்கத்துக்கு நன்றியறிந்தோஸ்திரஞ் செய்து, அவனுடைய பாவசங்கீர்த்தனத்தைக் கேட்டுப் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதங் கொடுத்தோம்.

நீரெம்பேர்க் என்னுங் குருவானவர் சொல்லியிருக்கிற வேறே ஒரு வர்த்தமானத்தைக் கேள். ஸ்பெயின் தேசத்தில் வாலென்சியாவென்கிற பட்டணத்திலே ஒரு வாலிபப் பெண் வியாதியாயிருந்தாள். அவளுடைய மவுனம், அடக்க ஒடுக்கத்தையும், அவள் அடிக்கடி பாவசங்கீர்த்தனஞ் செய்து நன்மை வாங்குவதையும் அறிந்தவர்கள் எல்லாரும் அவளை அர்ச்சியசிஷ்டவளென்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். அவளுக்குப் பாவசங்கீர்த்தனங் கொடுக்கும்படி அக்காலத்தில் பேர்போன பிரசங்கியாயிருந்த இராமிரோ என்னுங் குருவானவரைக் கூப்பிட்டார்கள். அவளும் திரளான கண்ணீரைவிட்டு அழுது பாவசங்கீர்த்தனஞ் செய்துகொண்டாள். குருவானவர் அவளுடைய பாவசங்கீர்த்-



தனத்தைக் கேட்டு பாவப் பொறுத்தல் ஆசீர்வாதங் கொடுத்து தம்முடைய மடத்துக்குப் போய்விட்டார். குருவானவருக்குத் துணையாகப் போயிருந்த சங்கியாசியார் மடத்துச் சிரேஷ்டரிடத்திற்போய்: சுவாமீ அந்த வாலிபப் பெண்பிள்ளைக்கு அந்தச் சுவாமி பாவசங்கீர்த்தனங் கொடுக்கும்போது, அவளுடைய கட்டிலின் ஒரு மூலையில் இருந்து கரோன்று கறுத்து உரோமம் நிறைந்த ஒரு பெரிய கை எழும்பி அவளுடைய கழுத்தைப் பிடித்து நெரித்தாற்போல அமுக்கினது. இப்படி அடிக்கடி சம்பவிக்கக் கண்டேனென்றார். இதைக் கேட்ட சிரேஷ்ட சுவாமியார் இராமிரோ சுவாமியாரை வரவழைத்து அந்தப் பெண்பிள்ளை பாவசங்கீர்த்தனம் பண்ணிக்கொண்டாளோவென்று விசாரிக்க, ஆமா சுவாமி, அவளுடைய நல்மனதையும் உருக்கமான பக்தி மனஸ்தாபத்தையுங் கண்டு எனக்கு மிகவும் ஆறுதலாயிருக்கிறது. ஆயினும் அவளுக்கு வியாதி மெத்தக் கடினமாய் இராதபடியால் நான் அவளுக்கு அவஸ்தைப் பூசுதல், அவஸ்தை நன்மை கொடுக்கவில்லையென்று சொன்னார். நல்லது நீர் திரும்பவும் அவள் வீட்டுக்குப்போய், அவள் மறு

படியும் பாவசங்கீர்த்தனஞ் செய்துகொள்ள வி
ருப்புள்ளோரோவென்று பார்த்துவாருமென்று சி
ரேஷ்டர் அவரை அனுப்பினார்.

இராமிரேயென்னுஞ் சுவாமியார் அந்தப் பெ
ண்பிள்ளையின் வீட்டுக்குத் திரும்பப் போய் வா
சற்படியில் கால் வைத்தவுடனே, அப்பொழுது
தான் அவள் உயிர் விட்டாளென்று சொன்னார்
கள். இதின்பேரில் குருவானவர் மனங் கலங்
கி என்னமோ ஏதோவென்று பலவாறாய் வி
சாரப்பட்டுக்கொண்டு மடத்துக்குத் திரும்பிப்
போய்ச் சிரேஷ்ட சுவாமியாரிடத்தில் நடந்த
சங்கதியெல்லாம் சொன்னார். சிரேஷ்ட சுவா
மியார் வெகுவாய் அதிசயித்து முந்தி அவருக்
குத் துணையாய்ப்போயிருந்த சந்நியாசியர் தம
க்குச் சொன்னதெல்லாம் அவருக்கு வெளியாக்
கி, நீர் அந்த ஆத்துமத்துக்காகப்போய் சுவா
மியைப்பார்த்து வேண்டிக்கொள்ளுமென்று
அனுப்பினார்.

குருவானவரும் அவ்விதமே கோவிலுக்குப்
போய்த் திவ்விய நற்கருணை முன்பாக மகாப் பத்
தி சுறுசுறுப்போடு வேண்டிக்கொள்ளத் துவக்
கினார். ஏறக்குறைய ஒருமணி நேரத்துக்குப்
பிறகு நடுச்சாமம் பதினொருமணிக்கும் பன்னி



ரண்டுமணிக்கும் நடுவில் திடுதிலென்று சங்
கிலிச் சத்தமும் துயரப் பெருமூச்சுச் சத்த
முங் கேட்டுத் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்து
பார்க்குகையில் ஒரு வாலிபப்பெண்பிள்ளை தலை
துவக்கிக் கால்வரையில் நெருப்பாய்ப் பற்றி
எரிகிறவளாய்த் தமக்கு முன் நிற்கக் கண்டார்.
நீ யாரென்று கேட்க அவள் மகாத் துயரமான
சத்தத்தோடே சொல்வாள். சுவாமி இன்று
காலமே உங்களிடத்தில் பாவசங்கீர்த்தனம்
செய்த நிர்ப்பாக்கிய ஆத்துமம் நான்தான்; ஜன
ங்கள் தெரியாமல் அர்ச்சியசிஷ்டவளென்று
கொண்டாடின நிர்ப்பாக்கிய பாவி நான்தான்.
சர்வேசுரனுடைய நீதியுள்ள தீர்மானத்தால்
நரக நித்திய ஆக்கினைகளுக்குத் தீர்வையிடப்
பட்டிருக்கிறேனென்றாள். சுவாமியார் அந்தப்
பயங்கர உருவத்தையும் கண்டு அது சொல்
லிய வார்த்தைகளையும் கேட்டுத் துக்கத்தில்
[illegible]யந்து நடுங்கியிருந்தாலும், சற்று நேரத்துக்
[illegible] மனதைத் தேற்றிக்கொண்டு கேட்டார்:
[illegible]லை அது இதெப்படி? நம்மிடத்தில் இன்று நீ
பாவசங்கீர்த்தனம் செய்யவில்லையா? ஆமா,
சுவாமி. ஆனால் நன்றாய்ச் செய்யவில்லை, ஆ
கையால் சர்வேசுரன் எனக்கு அதிக வெட்க

முழம், மற்றவர்களுக்கு நற்படிப்பினையும், தமக்
குத் தோத்திரமுமுண்டாகும்படி நான் என்
பாவங்களை உமக்கு வெளியாக்கும்படி கற்பித்
திருக்கிறார். ஆகையால் என் நிர்ப்பாக்கியத்
தைச் சொல்லுகிறேன் கேளும்: என் தாய்
உயிரோடிருக்கும்போது நான் நல்லபிள்ளை
யாய்ப் புண்ணியவழியில் நடந்தேன். அவள்
இறந்தபின் இளந்தையாயும் அழகாயும் தனி
யேயிருந்ததால் அந்தக் காலத்தில் ஒரு வாலி
பன் என்னோடு சிநேகமானான். அவனுடைய
அலட்டுத் தொந்தரவுகளால் மயங்கி அவனோடு
ஒரு பாவத்தைக் கட்டிக்கொண்டேன். அதன்
பிறகு எங்கள் குருவானவர் என்பேரில் குறை
வான எண்ணங்கொள்ளுவாரோவென்று பயந்
து என் பாவத்தைச் சொல்ல எனக்குத் தைரிய
மில்லாமற்போயிற்று. ஆயினும் நான் வாரம்
வாரம் பாவசங்கீர்த்தனஞ் செய்து திவ்விய
நன்மை வாங்கிவந்தேன். இவ்விதமாய் நான்
பாவத்தின்மேல் பாவத்தையும் தேவதுரோகத்
தின்மேல் தேவதுரோகத்தையும் கட்டிக்கொ
ண்டு மூன்று வருஷம் வரையில் நடந்துவந்
தேன். அப்போது சர்வேசுரன் உங்களை இந்
த ஊருக்கு அனுப்பி என் கண்களைத் திறக்கத்



சித்தமானார். நீங்கள் செய்த சகல பிரசங்கங்
களையும் கேட்டேன். ஒவ்வொரு பிரசங்கமும்
என் இருதயத்தைக் குத்தித் துளைத்துப்போட்
டது. நான் கோவிலிலிருந்து வீட்டுக்கு வந்து
ஓயாமல் அழுது என்னை நோக்கி ஐயோ; நீ சபி
க்கப்பட்டு, நரக ஆக்கினைகளை நித்திய காலத்
துக்கும் சகிக்கக்கூடுமோ? உனக்குப் பாவத்
தைச் செய்ய வெட்கமில்லாமல் போய்விட்ட
தே. அதைச் சங்கீர்த்தனம்பண்ணமாத்திரம்
நீ வெட்கப்படலாமா? குருவானவர் உன்னை
என்ன செய்துவிடுவார்? உன்னைக்கொன்று
போடுவாரா, இல்லையென்று உன் பாவத்தைத்
யாரிடத்திலாவது சொல்லித் தூற்றுவாரா?
இல்லையே, அப்படியானால் நீ ஏன் பயப்பட
வேணும்? ஒரு குருவானவரிடத்தில் போகப்
பயமாயிருந்தால் வேறொருவரிடத்தில் போ.
உன் பாவங்களுக்காக சிந்தப்பட்ட ஆண்டவ
ருடைய திரு இரத்தம் உனக்கு வீணாய்ப் போ
கவொட்டாதே. பயப்படாதே. உன்னை அ
ளை மணி நேரம் நரகத்தினின்று மீட்டு உன
க்குச் சந்தோஷத்தையும் சமாதானத்தையும்
கொண்டுவர போதும். தைரியமாய்ப் பாவ
சங்கீர்த்தனத்துக்குப் போவென்று எனக்கே

நான் இப்படிச்சொல்லி என்னைத் தேற்றிக்கொண்டு புலம்புவேன். இவ்விதமாய் என் மனதுக்குள் பலவாறாய்ச் சஞ்சலப்பட்டுக் கடைசியாய் உங்களிடத்தில் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணவேணுமென்று தீர்மானித்தேன். ஆனால் நான் வழக்கமாய்ப் பாவசங்கீர்த்தனம் செய்கிற குருவானவரை விட்டு உங்களிடத்தில் வருகிறது மற்றவர்களுக்குத் தெரியாதிருக்கும்படி, நான் சுகமாயிருந்தாலும் வியாதியாயிருப்பதாகப் பாவித்து உங்களுக்கு ஆளனுப்பினேன். உங்களிடத்தில் பாவசங்கீர்த்தனம் செய்யும்போது என் பெரிய பாவங்களைக் கடைசியில் சொல்லிக்கொள்ளலாமென்று சின்னச் சின்னப் பாவங்களைச் சொல்லத் துவக்கினேன்; அதுவும் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். ஆனால் ஐயோ என் பெரிய பாவங்களை முதலில் சொல்லத் துவக்கினேனில்லையே! அப்படித் துவக்கியிருந்தால் எல்லாம் சொல்லியிருப்பேன். ஆனால் வெட்கப்பட்டு அப்படித் துவக்காததினாலே அவைகளைச் சொல்லாமலே பாவசங்கீர்த்தனத்தை முடித்தேன். நீங்கள் எனக்குப் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம் கொடுத்தீர்கள். அதுவே எனக்குச் சாபமும் தீர்



லையுமாகிவிட்டது. நீங்கள் என் வீட்டைவிட்டுச் சற்றுத்தூரம் போயிருக்கமாட்டீர்கள், அதற்குள்ளாக எனக்கு வாய் குளறிப் பேச்சுத் தடுமாட்டம் ஆயிற்று. சற்று நேரத்துக்குள் என் அறிவு மாறிப்போய்விட்டது. கடைசியாய் என் உயிரையும், அத்தோடு நான் சபித்துத் தள்ளப்பட்டிருக்கிற இந்த நரகத்துக்குத் தப்பி மோக்ஷத்தை அடையலாமென்கிற நம்பிக்கையையும் இழந்துபோனேன் என்றாள். இதைச் சொன்னபின் வேறொன்றும் சொல்லாமல் மவுனமாயிருந்தாள்.

அப்பொழுது குருவானவர் அவளை நோக்கி இப்பொழுது உனக்கு அதிக உயரக் கஸ்தியை வருவிக்கிறது என்னவென்று சொல்லென்று கேட்க, அவள் சொல்லுவாள்: நான் வெகு சுலபமாய் இந்தப் பாவங்களையெல்லாம் விலக்கக் கூடியதாயிருந்தும் விலக்கிக்கொள்ளவில்லையே யென்பதும், என் பாவங்களைச் சங்கீர்த்தனம் செய்யக் கூடுமாயிருந்தும் செய்யவில்லையே யென்பதும், எனக்கு ஞான மருந்தாகச் சர்வேசுரன் உங்களை வெகு தூரத்திலிருந்து கொண்டுவந்திருந்தும் நான் ஒரு பலனையும் அடையாமல் போனேனென்பதும், என் இரக்ஷணியத்

துக்காக நீங்கள் என் வீட்டில் என் தலைமாட்டில் வந்திருந்தும், உங்களையே என் சாபத்துக்குக் காரணமாக்கிக்கொண்டேன் என்பதுமே, எனக்குச் சகிக்கக்கூடாத துயரமாயிருக்கிறது என்று இவ்வார்த்தைகளைச் சொல்லி நீண்ட பெருமூச்சுவிட்டு அலறிக்கொண்டு சங்கிலிச்சத்தங்களோடு மறைந்துபோனாள்.

இதை வாசித்த பிரிய சகோதரமே! சர்வேசுரன் தமது அளவில்லாத இரக்கத்தினாலே நமக்குக் கொடுத்திருக்கிற பச்சாத்தாபமென்கிற தேவ திரவிய அநுமானத்தை ஒருபோதும் உனக்கு வீணாக்கிக்கொள்ளாதே. உன் பாவங்கள் எவ்வளவாயிருந்தாலும் பயந்து கூச்சப்பட்டு ஒருபோதும் ஒளியாதே. உன்னால் கூடியமட்டும் தக்க ஆயத்தஞ்செய்து மெய்யான மனஸ்தாபத்தோடும் ஸ்திர பிரதிக்கினையோடும் உண்மையான பாவசங்கீர்த்தனம் செய்து வருவாயாகில் உன் பாவங்களுக்குப் பொறுத்தல் அடைந்து மனச் சமாதானத்தையும் நித்திய சீவியத்தையும் கைக்கொள்வாய்.

707